**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2016**

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 22 ஆம் இலக்க வனசீவராசிகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட வனசீவராசிகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 71(2)(ஏ) இன் கீழ் வழங்கப்படுகின்ற கட்டளைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எழும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 69 ஆம் பிரிவிற்கமைய சொத்தொன்றை பயன்படுத்துவதற்கான தயார்படுத்தப்பட்ட நிலைக்கு கொண்டு வந்த திகதி முதல் பெறுமானத்தேய்விடல் ஆரம்பிக்கப்பட வேண்டும். எனினும், அதற்கு முரணாக நிதியத்தின் சொத்துக்களை பெறுமானத்தேய்விடும் கணக்கீட்டுக் கொள்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நிறுவனத்தினால் முழு வருடத்திற்கும் சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட்டமையால் ரூபா 6,549,506 கூட்டுத்தொகை கூடுதலாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நடைமுறை வேலைகளாக கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 4,716,463 தொகை கட்டிட பழுதுபார்த்தல் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த ரூபா 24,455,199 கூட்டுத்தொகையான நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | திறைசேரி சுற்றறிக்கை | |
| (i) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களில் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதிக்கு சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த வருடாந்த பெறுமானத்தேய்வுகள், பெறுமதியிலான அதிகரிப்பு அல்லது கைத்தவிர்ப்புகள் தனித்தனியாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 5,840,653 கூட்டுத்தொகையான கணனி உதிரிபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் வேறு வேறாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) | 5.2.4 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் அதற்கடுத்த ஆண்டிற்கான பாதீடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2016 மார்ச் 04 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 8.2.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது ரூபா 630,839,778 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2013 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 4/2013 ஆம் இலக்க உள்ளகக் கணக்குகள் சுற்றறிக்கை | ரூபா 2,018,765 கூட்டுத்தொகையான வெகுமதிகளை கையேற்றல் மற்றும் கணக்கு வைத்தல் தொடர்பில் சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,168,164,618 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 942,005,927 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 226,158,691 தொகையான அதிகரிப்பை காணக்கூடியதாக இருந்தது. மொத்த செலவினம் ரூபா 250,160,200 இனால் அதிகரித்திருந்த போதிலும், பூங்கா நுழைவுக் கட்டண வருமானம் ரூபா 381,680,278 இனால் அதிகரித்தமை மற்றும் சேவைக் கட்டணங்கள் ரூபா 63,406,700 இனால் அதிகரித்தமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1968 நவம்பர் 29 ஆந் திகதிய 14/830 ஆம் இலக்க வர்த்தமானிக்கமைய நிதியத்தின் பணிகள் பின்வருமாறு.

(i) வன விலங்குகளைப் பாதுகாத்தலும் பாதுகாப்புத் தொடர்பில் பொது மக்களின் ஆர்வத்தை விருத்தி செய்தலும்.

(ii) வன விலங்குகளைப் பாதுகாத்தலும் பாதுகாத்தல் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட சகல பிரதேசங்களையும் பராமரித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் முன்னேற்றுதல்.

(iii) சுய அதிகாரங்களை பிரயோகிக்கும் போது அல்லது அதிவிஷேட திறமை அல்லது அச்சமற்ற தன்மையை ஏற்படுத்திய உத்தியோகத்தர்களுக்கும், பொது மக்களுக்கும் பணிக்கொடைகள் அல்லது வெகுமதிகளை வழங்குதல்.

(iv) வன விலங்குகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் 11 ஆவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் கீழ் ஏற்படும் தவறுகள் காரணமாக எவரையேனும் குற்றவாளிகளாக்குவதற்கு முறையாகவோ அல்லது வேறு எவ்விதத்திலோ அறிவிப்பவர்கள் எனும் வகையிலோ அல்லது வேறு விதத்தில் பொறுப்பானவர்களாக உருவாகியிருப்பவர்களுக்கு பணிக்கொடை அல்லது வெகுமதி வழங்கல் மற்றும் சகல நோக்கங்களுடனும் தொடர்புடைய எல்லா விடயங்களையும் முன்னேற்றுவதும் அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்று தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 366,350,000 தொகையான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 38 செயற்திட்டங்கள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 56 செயல்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 109,510,950 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 51,510,000 தொகையான பணம் விடுவிக்கப்பட்டிருந்த 14 செயற்திட்டங்களின் 50 சதவீதத்திற்கும் குறைவான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் பெறப்பட்டிருந்தது.

(ஈ) தெற்கு வனசீவராசிகள் வலயத்திற்குரிய உடவலவை எத் அத்துவ செவனயின் 4 கண்காணிப்புக் கூடங்களை நிர்மாணிப்பதற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய ரூபா 8,000,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான ரூபா 8,208,600 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு 02 கண்காணிப்பு கூடங்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது மன்னார் பதவியணியினர் இல்லம், வனாந்தர பாதுகாப்பு அலுவலகம் மற்றும் தொழிலாளர் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு ரூபா 1,933,200 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2017 மார்ச் 08 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. முற்பண பிணை காலாவதியாகுவதற்கு முன்னர் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையினை அறவிடுவதுடன் தொடர்புடைய நட்டத்தினை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அத்துறு செவணயினை பார்வையிடுவதற்கு வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடமிருந்து கட்டணங்களை அறவிடுவதற்காக கையால் வரையப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், இயந்திர முறைமையில் பற்றுச்சீட்டுக்களை வெளியிடுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மனித உயிர்ச் சேதங்களை குறைக்கும் நோக்கில் மீளாய்வாண்டில் யானைப் வெடிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 86,635,431 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது விலங்குகளால் 88 உயிர்ச் சேதங்கள் விளைவிக்கப்பட்டிருந்தன.

(ஈ) உடவலவை யானைகள் சரணாலயம்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 கண்காணிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதி ரூபா 10,247,956 தொகையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை 90 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், கணக்காய்வு திகதியான 2017 மார்ச் 08 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த உடன்படிக்கையில் 6.4 ஆம் பிரிவிற்கமைய ஆரம்ப ஒப்பந்த தொகையில் நாளொன்றுக்கு 0.05 சதவீதமான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) யானைகள் சரணாலயத்திற்கு முன்னாலுள்ள வீதியினை மண் இட்டு செப்பனிடுவதற்கு ரூபா 678,425 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும், குறித்த நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) உடவலவை யானைகள் சரணாலயத்தின் வளாகத்தில் வேலியினை வலுப்படுத்துவதற்காக 2'GI குழாய்கள் 02 காணப்படும் இடங்களில் 2'GI குழாய்கள் 03 இனை இடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 13 மற்றும் 19 ஆம் இலக்க தடுப்பு நிலையங்களில் அவ்வாறு GI குழாய்கள் பொருத்தப்படாதுள்ள போது அதற்காக ரூபா 309,556 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2012 ஆம் ஆண்டின் போது ரூபா 11,730,808 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட வில்பத்து தேசிய பூங்காவில் அமைந்துள்ள கொல்லனகந்த (வீவல) சுற்றுலா விடுதி நீர் பிரச்சினைகளின் காரணமாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 வாகனங்கள் பயன்பாடு

வனசீவராசிகள் திணைக்களத்திற்குரிய 86 வாகனங்களுக்குரிய காப்புறுதியினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5,846,203 தொகை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்திக்கமைய எந்தவொரு நிதியத்தினாலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்திக்கமைய 2014 – 2018 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் நலிவான நிலையொன்றில் காணப்படுவதாக நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை வலுவூட்டுவதற்கான பிரவேசமொன்று நிறுவனத்தில் இல்லாதிருப்பதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், நிறுவனத்தின் விடயப்பொறுப்பு பரம்பலடைவதற்கு ஒப்பாக உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பதவியணியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புகளினுள் நிதியத்தின் செயலாற்றல் கணக்காய்விற்கு போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 11 சந்தர்ப்பங்களில் 18 சதவீதம் முதல் 208 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் அண்டின் வருடாந்த அறிக்கைகள் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுபாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | | **அவதானிப்புகள்** |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) | தண்டப்பண பெறுவனவு உரிய முறையில் குறித்த ஆண்டிற்கமைய இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை |
| | | (ii) | கணனி பதிவேடுகள், பட்டோலைகள் புத்தகப் பதிவேடு மற்றும் விரிவான பதிவேடுகள் பேணப்பட்டிராமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை. |
| (இ) | இருப்புக் கட்டப்பாடு | பிரதேச அலுவலகங்களின் இருப்பு பதிவேடுகள் முறையாக பேணப்பட்டிராமை |
| (ஈ) | நுழைவுச்சீட்டுக்களை விநியோகித்தல் | கணனிமயப்படுத்தப்பட்ட நுழைவுச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிராமையால் பணம் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கான இடமளிக்கப்பட்டுள்ளதாகவும், பணத்தின் சரியான தன்மை தொடர்பான சிக்கல் நிலமையொன்று காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | (i) வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரால் தமது பொறுப்பில் உள்ள வாகனங்கள் தொடர்பில் பதிவேடொன்று பேணப்படாமை.<br>(ii) நிதியத்திற்கு சொந்தமான வாகனங்களுக்கான சம்பவக் குறிப்பு புத்தகம் நாளதுவரையாக பேணப்பட்டிராமை.<br>(iii) அனைத்து வாகனங்களினதும் மாதாந்த பொழிப்புக்களின் மூலம் பிரதியுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிராமை.<br>(iv) வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயரை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |